பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**22 12 2025** **7 15**

திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

**1.** மகாராஷ்டிர உள்ளாட்சி தேர்தலில் அடைந்த வெற்றி, நல்லாட்சி, வளர்ச்சி மற்றும் பொதுநலனுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசியலுக்கான அடையாளம் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

**2.** தேசிய கணித தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

**3.** ஆரவல்லி மலைத்தொடரில் சுற்றுச்சூழலை பாதிக்கும் எந்தவிதமான பணிகளும் நடைபெறவில்லை என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவித்துள்ளது.

**4.** தெலங்கானா மாநிலத்தின் **11** மாவட்டங்களில் கடும் குளிர் நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** மும்பையில் நடைபெற்ற வெஸ்டர்ன் இந்தியா ஸ்குவாஷ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பாவும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Veer Chotrani**-யும் பட்டம் வென்றனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மகாராஷ்டிரா மற்றும் அருணாச்சலப்பிரதேச உள்ளாட்சித் தேர்தல்களில் பிஜேபி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி மக்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதற்கான சான்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது மக்களின் நம்பிக்கையை பிரதிபலிப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த வெற்றிக்காக பாடுபட்ட பிஜேபி மற்றும் கூட்டணிக் கட்சித் தொண்டர்களை அவர் வெகுவாக பாராட்டினார்.

மாநிலங்களின் வளர்ச்சியில் மேலும் கவனம் செலுத்த இந்த வெற்றி உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு குடிமகனின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற புதிய உற்சாகத்துடன் அரசு செயல்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி, வளர்ச்சி மற்றும் பொதுநலனுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசியல் வெற்றி பெற்றதற்கான அடையாளம் இது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை இது பிரதிபலிக்கிறது என்று பிஜேபி தேசிய செயல்தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தனியார் நிறுவனங்கள், அணுசக்தி உற்பத்தியில் பங்கேற்பதற்கான மசோதாவிற்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இந்தியாவின் அணுசக்தியை நிலையான முறையில் பயன்படுத்தி மேம்படுத்தும் ''சாந்தி மசோதா'' மூலம் அணு ஆற்றல் துறையை சார்ந்த அனைத்து சட்டங்களையும் ஒருங்கிணைத்து புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அணு ஆற்றல் துறையின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த 1962ஆம் ஆண்டு அணுசக்தி சட்டத்தையும், 2010ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அணு சேதத்திற்கான குடிமைப் பொறுப்பு சட்டத்தையும் இந்தப் புதிய சட்டம் ரத்து செய்கிறது.

இந்த சட்டத்தின் மூலம் அரசின் அனுமதியுடன் தனியார் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அணுமின் நிலையங்களைக் கட்டவும், சொந்தமாக வைத்திருக்கவும், இயக்கவும் பின்னர் அவற்றை அகற்றவும் முடியும்.

<<<<>>>>

ஆரவல்லி மலைத்தொடரில் சுற்றுச்சூழலை பாதிக்கும் விதத்திலான குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் அமைக்கும் பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்றும், அங்கு சூழலியலுக்கு எந்தவிதமான அபாயமும் இல்லை என்றும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி உள்ளூர் நில அமைப்பைவிட 100 மீட்டர் அல்லது அதற்கு மேல் உயரம் கொண்ட எந்தவித கட்டட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறியுள்ளது.

முழு சூழலியல் அலகுகள் பாதுகாக்கப்படுவதாகவும், இதன் மூலம் மண்ணின் நிலைத்தன்மை, நீர் ஊடுருவல் ஆகியவை பாதுகாக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

500 மீட்டர் மண்டலத்திற்குள் உள்ள அனைத்து சுரங்கம் தோண்டுவதற்கான உரிமங்கள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

ஆரவல்லி மலையின் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அந்த மலைத்தொடர் பாதுகாக்கப்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகின் மிகச் சிறந்த கணித மேதையான ஸ்ரீனிவாச ராமனுஜத்தின் 137வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

அறிவியல் முன்னேற்றத்திலும், அன்றாட வாழ்விலும் கணிதத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் அனைத்துக் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீனிவாச ராமானுஜத்தின் அசாத்தியமான பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் 2011ஆம் ஆண்டு முதல் கணித தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அவருடைய ஆய்வுகள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நவீன கணிதவியலில் இன்றும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த நாளையொட்டி கும்பகோணம் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சர்வதேச அளவில் கணிதத்தில் சிறப்பாக விளங்கும் 32 வயதுக்குட்பட்ட நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஸ்ரீனிவாச ராமானுஜன் விருது வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த முனைவர் அலெக்சாண்டர் ஸ்மித்-க்கு 10 ஆயிரம் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஸ்ரீனிவாச ராமானுஜன் விருது வழங்கப்பட்டது.

இதுகுறித்து அமெரிக்க வாழ் அறிஞர் அல்லாடி கிருஷ்ணசாமி பெருமிதம் தெரிவித்தார்.

**(Voice Byte - Alladi Krishnasamy - 39 Sec)**

<<<<>>>>

ரஷ்யா - யுக்ரைன் இடையே கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டு வரும் விதத்தில் அமெரிக்காவின் ஃபுளோரிடாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரி திரு. **Steve Witkoff** தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் யுக்ரைன் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதனிடையே ரஷ்யாவுடன் இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் திரு. **Steve** தெரிவித்தார்.

<<<<>>>>

30 போர் விமானங்கள் மற்றும் இரண்டாயிரம் கடற்படை வீரர்களை தாங்கிச் செல்லும் நவீன போர்க்கப்பலை ஃபிரான்ஸ் உருவாக்கும் என்று அந்நாட்டு அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

இந்த அதிநவீன கப்பல் 2038ஆம் ஆண்டுக்குள் தயாரிக்கப்படும் என்றும், இந்த போர்க் கப்பல் அணுசக்தியில் இயங்கும் கப்பலாக உருவாக்கப்படுகிறது.

மேலும் பிரான்சின் ரஃபேல் நிறுவனத்தின் M-Fighter போர் விமானங்கள் இயங்கும் விதத்தில் தயாரிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அடுத்த 2 ஆண்டுகளில் இதற்காக 6 புள்ளி 5 பில்லியன் யூரோ வழங்கப்படும் என்றும் திரு. இம்மானுவேல் மேக்ரோன் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் இன்று நடைபெற இருக்கும் தெஹ்ரீகே இன்சாஃப் கட்சித் தொண்டர்களின் போராட்டத்தை ஒட்டி காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கின் தீர்ப்பில் அவருக்கும், அவரது மனைவி புஷாரா பீவிக்கும் 17 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாடு தழுவிய போராட்டம் நடத்த வேண்டும் என்று இம்ரான் கான் கேட்டுக்கொண்டதை அடுத்து இந்தப் போராட்டம் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

தாய்லாந்து - கம்போடியா எல்லைக்கு அருகே வசிக்கும் மக்களிடையே ஏற்பட்டுள்ள சண்டையில் இதுவரை 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 5 லட்சத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் மலேசியாவில் தெற்காசிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

கடந்த 8ஆம் தேதி முதல் நடைபெற்று வரும் இந்த சண்டையின் காணரமாக அங்கு அமைதியற்ற சூழல் நிலவுகிறது.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பின் ஆதரவுடன் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தையில் சண்டைநிறுத்தம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

தெலங்கானா மாநிலத்தின் 11 மாவட்டங்களில் கடும் குளிர் நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடிலாபாத், மஞ்செரியல், நிர்மல், வாரங்கல், சித்திபேட் உள்ளிட்ட சில பகுதிகளில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும், வெப்பநிலை குறைந்தபட்சமாக 2 டிகிரி முதல் மைனஸ் 3 டிகிரி வரை இருக்கக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தலைநகர் ஹைதராபாதில் 8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மும்பையில் நடைபெற்ற வெஸ்டர்ன் இந்தியா ஸ்குவாஷ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஜோஷ்னா

சின்னப்பாவும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Veer Chotrani**-யும் பட்டம் வென்றனர்.

---------------

இலங்கைக்கு எதிரான முதலாவது மகளிர் டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்தது.

பின்னர் பேட் செய்த இந்தியா 14 புள்ளி 4 ஓவரில், 2 விக்கெட் இழப்பிற்கு 122 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

**<<<<The End>>>>**